பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 18 புதன்கிழமை 03.08.2022 கதிர் 271

இது ரகசியம் அல்ல!

அரசியல் என்றால் ஆரவார மிருக்கும். ஆர்ப்பாட்டமாக விடயங்கள் அரங்கேறும்.

ஆனால், ராஜதந்திரம் அப்படியல்ல. சத்தம் சந்தடியின்றி விவகாரங்கள் கட்டவிழும்.

இலங்கையில் இப்போது இரண்டுமே தீர்க்கமாக

2

# சர்வ கட்சி அரசு குறித்து ரணில் பேச்சுகளை நேற்று ஆரம்பித்தார்

## இன்று மாலை கூட்டமைப்புடன் சந்திப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 03

சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பது தொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளுடனான பேச்சுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆரம்பித்தார்.

அரசியல் கட்சிகளுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றன என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

03

## அரசியல் தீர்வுக்கு தீர்க்கமான அணுகுமுறை மாற்றம் தேவை

### முன்னாள் எம்.பி. சுரேஷ் வலியுறுத்து



இளைஞர்களும் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் களமாடும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் ஓரணியில் திரண்டு எமக்கான குறுகிய காலமற்றும் நீண்டகால வேலைத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவது அவசியமாகும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு முழக்கத்தை முன்வைத்து செயற்படுவது வெற்றியளிக்காது.

– இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள்

03

## ரணிலுக்கு சம்பந்தன் சாதகமாகச் சமிக்ஞை

'பொருளாதாரம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்துப் பொருத்தமான தேசிய திட்டத்தை செயல்படுத்துதல்' என்ற தலைப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சாதகமாகப் பதிலளித்துள்ளார்.

"மேற்படி விடயம் தொடர்பான உங்கள் கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். அத்தகைய தேசிய அனைத்துக் கட்சித்

2

## அந்தோனியார் சுரூபங்கள் கஜூவத்தையில் உடைப்பு



(மன்னார் நிருபர்)

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட கஜூவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் உள்ள தூய அந்தோனியார் திருச் சுரூபங்கள் இரண்டு இனம்

2

முல்லேரியா பிரதேச சபையின்

## 'மொட்டு' உறுப்பினர் சுட்டுப் படுகொலை!



முல்லேரியா பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியா வங்கி சந்திப் பகுதியில் நேற்று மாலை இந்தச்

03

## மலையகத்தில் சீரற்ற வானிலை; 4 பேர் பலி; மூவரைக் காணோம்

மலையகத்தில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை நால்வர் மரணித்துள்ளதுடன், மூவர் காணாமல் போயுள்ளனர்.

நோட்டன் பிரிட்ஜ் டெப்லோ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் ஒருவர் உயிரிழந்துள்ளார் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை ஹட்டன் – பன்மூர் குளத்தில் வழுக்கி விழுந்து எபோட்சிலி தோட்டத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவர்

2

## நோட்டன் பிரிட்ஜில் திங்கள் மண் சரிவில் ஒருவர் மரணம்



நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டெப்லோ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானார் என நோட்டன் பிரிட்ஜ்

2

## எரிபொருள் நிலையச் சர்ச்சை; புடவைக் கடை தாக்கப்பட்டது



யாழ்ப்பாணம் கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில்

2

## 100 நாள்கள் கவனவீர்ப்பு நேற்றுக் கிளிநொச்சியில்!



வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி 100 நாள்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தின் இரண்டாம் நாள் போராட்டம் கிளிநொச்சியில்

03

## ஒரே நாளில் 7 பேரை சாகடித்த கொரோனா

இலங்கையில் மேலும் 7 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த இறப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 ஆண்களும், 4 பெண்களும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

2

## யாழில் இருந்து படகில் சென்ற இருவர் வேதாரண்யத்தில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.03

யாழ்ப்பாணம் பலாலியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற சமயம் படகு பழுதடைந்த காரணத்தினால் தமிழகத்திற்குள் நுழைந்தனர் எனத் தெரிவித்த இருவர், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் நாகப்பட்டினம் மாவட்டம்,

03

## விக்னேஸ்வரன் அமைச்சராவதா? குமுறுகின்றார் அருந்தவபாலன்!




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஓக.03

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடக்கின்றன. அரசியல் விடயங்கள் ஆரவாரமாக அரங்கேறுகின்றன. திரைமறைவில் நடக்கும் ராஜதந்திரங்கள்தான் வெளியே தெரிவதில்லை.

'யானை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே!' என்பார்கள். இலங்கையில் பெரும் ராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கும் சீனப் பாதுகாப்பு ஆய்வுக் கப்பல் அடுத்த வாரம்தான் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் நுழைகின்றது. ஆனால், அதற்கு முன்னரே அதற்குத் தொலைவில் இருந்து பாதுகாப்பு வழங்கும் விதத்தில் இன்னொரு கப்பல் கிழக்குக் கடலில் சம்மாந்துறைக்கு அப்பால் நடமாடுவது இந்தியத் தரப்பினால் அடையாளம் காணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அண்மையில் இலங்கைக்கு மிக மோசமான பொருளாதார நெருக்கடி வந்தபோது இந்தியாதான் விரைந்து உதவிக்கு வந்தது. பிரதமர் மோடியின் 'வெளியுறவுக் கொள்கையில் அயல் தேசத்துக்கு முன்னுரிமை' என்ற நிலைப்பாட்டை வசமாகப் பயன்படுத்தித் தேவையான உதவிகளை தாராளமாகவே சுவீகரித்துக் கொண்டது இலங்கை. அச்சமயத்தில் சீனா இலங்கை தொடர்பில் கடும் இறுக்கப் போக்கில் இருந்தது. கடன் மறுசீரமைப்புக்குக் கூட ஒத்துழைப்புத் தராத கறார் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.

ஆனால் இப்போது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதாக உள்வீட்டு வட்டாரங்களில் பேசப்படுகின்றது. மே 9ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ இறங்குவதற்கு முன்னர், பிரதமர் என்ற முறையில் சீனப் பிரதமருடன் தொலைபேசியில் பேசினார் என செய்திகள் வெளியானமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்த நெருக்கடி சமயத்தில் சீனா தங்களுக்குப் போதுமான வகையில் உதவ முன் வரவில்லை என்று அச்சமயம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீனப் பிரதமரிடம் குறைப்பட்டுக் கொண்டிருந்தார். அதன் பின்னர் அந்த விவகாரத்தைத் தெளிவுபடுத்தி, விவரமான முறைப்பாட்டுப் பாங்கான கடிதம் ஒன்றையும் பீஜிங்குக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுப்பி இருந்தார் எனக் கூறப்படுகிறது.

அந்தக் கடிதமே இப்போது வேலை செய்யத் தொடங்கி இருப்பதாக பீஜிங்கின் பக்கத்திலிருந்து கொழும்புக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின்மூன்று முக்கிய பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் இப்போது மிஸ்ஸிங். அந்த மூன்று பிரிவுகளையும் இப்போது அவற்றின் துணை அதிகாரிகளே கையாளுகின்றனர். கேட்டால் மேற்படி மூன்று அதிகாரிகளும் விடுமுறையில் சீனா சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றதாம். மூன்று முக்கிய பிரிவுகளின் தலைவர்கள் ஒரே சமயத்தில் – அதுவும் இலங்கை விவகாரம் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் நேரத்தில் – ஒன்றாக விடுமுறையில் சென்று இருக்கின்றனர் என்ற கூற்று நம்பக் கூடியதாக இல்லை. இலங்கைக்கு இக்கட்டுச் சமயத்தில் சீனா சரிவர உதவவில்லை என்ற முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிருப்திக் கடிதத்தை அடுத்து, விசாரணைக்காகவே அந்த மூன்று அதிகாரிகளில் குறைந்தபட்சம் ஒருவராவது பீஜிங்கிற்கு அழைக்கப்பட்டு இருக்கின்றார் என்று தெரிகின்றது.

இலங்கையைச் சமாளித்து தாஜா பண்ண, உடனடியாக இவ்வருடத்தில் 4 பில்லியன் அமெரிக்க டொலர் அளவு உதவியை வழங்க சீனா முன்வந்துள்ளது என்றும், அதனால் புதுடெல்லி உறவுக்கு சமதையாக சீனாவை அரவணைக்க ரணில் – மஹிந்த கூட்டு தீர்மானித்திருக்கின்றது என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சீனப் பல்கலைக்கழகம் ஒன்றின் பெயரில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு கல்வித்துறை நிகழ்வில் பிரதான உரையாற்ற வருமாறு சீனப்பக்கத்தில் இருந்து அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது. அந்த உத்தியோகபூர்வ அழைப்பைக் காட்டி, தமக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்கச் செய்து, சீனா போவதற்கு மஹிந்த தயாராகி வருகின்றார் என்று தெரிகின்றது. சீனா செல்லும் அதே சமயம் அதை சமாளிப்பதற்கு இந்திய விஜயம் ஒன்றையும் பார்த்துக் கொள்ளும்படியும் தம் நண்பர் சுப்ரமணியசுவாமிக்கும் மஹிந்தர் சார்பில் தகவல் கொடுக்கப்படலாம் எனத் தெரிகின்றது.

கோட்டா போய் ரணில் – மஹிந்த கூட்டு வந்திருப்பதை சீனா சாதகமான நிலைமையாகப் பார்க்கிறது என்றும் கூறப்படுகிறது.

இதே சமயம் சீனா, மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம் போன்றவற்றுடன் அதிக ஈடுபாட்டுடன் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. இந்திய ஆட்சேபத்தை மீறி, சீனப் பாதுகாப்பு ஆய்வுக்கு கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்து தங்கிச் செல்வதற்கான அனுமதியை வழங்குவது என்ற முடிவை இலங்கை அமைச்சரவையும் அங்கீகரித்துத் தனது தீர்மானமாக அறிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தியாவை ஒதுக்கி, சீனாவின் தாழ் பணியும் கொழும்பின் தீர்மானம் பல பக்க விளைவுகளுக்கும் விதை விதைக்கும் செயலாகவே படுகின்றது. பாவம் கொழும்பு...!

– மின்னல் –

---

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டத்தை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் நாங்கள் எங்கள் முழு ஆதரவை வழங்குவோம்.

“நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து அரசியல், சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதாரம் எனப் பல பிரச்சினைகள் நாடு எதிர்கொண்டுள்ளது. அனைத்துத் தேசிய பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.” – என்று சம்பந்தன் நேற்று முன்தினம் தாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

---

## விக்னேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'விக்கி கோ கொழும்பு' என்கிற கோத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் அருந்தவபாலன் தெரிவித்தார்.

தென்மராட்சியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் எழுத்து மூலம் செய்யப்பட்ட உறுதிப்பாடுகள், மனதால் இணைந்த உறுதிப்பாடுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்த்தோம். தற்போதைய அரசோ நிலையற்ற அரசு. இந்த அரசால் எந்த ஒரு பிரச்சினையையுமே தீர்க்க முடியாது. குறைந்தது தற்போதுள்ள பொருளாதார பிரச்சினையைக் கூட தீர்க்குமா என்பதே கேள்விக்குறி.

தற்போதைய அரசும் சிங்கள, பௌத்த விடயங்களை பாதுகாக்கின்ற ஒன்றே. எழுத்து மூலமான ஒப்பந்தங்களோ வாய் மூலமான ஒப்பந்தங்களோ அவர்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே அன்றி அவற்றால் எந்தப் பலனும் கிடையாது.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் தற்போதைய அரசாங்கத்தில் இணைய மாட்டார் என முழுமையாக நம்புகின்றோம். ஆனால் அவர் அரசாங்கத்தில் இணைவாரா, இல்லையா என்பதை உறுதியாக கூற முடியாமலே இருக்கின்றோம். அவர் எடுக்கின்ற முடிவுகள் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடியவையாகவோ அல்லது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியவையாகவோ அமையவில்லை என்பது மன வருத்தத்துக்குரிய விடயம். எவ்வாறாயினும் ஒரு துரதிஷ்டமான ஒரு முடிவை ஏற்படாது என்றே நாம் நம்புகின்றோம்.

ஆனால் தன்னிச்சையான முடிவை எடுத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால் 'விக்கி கோ கொழும்பு' என்கிற கோத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன்.– என்றார்.

---

## அந்தோனியார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன கொக்குப் படையான் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குப்படையான் கிராம மக்கள் கஜுவத்தை பகுதியில் பலவருடங்களாகக் காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஆராதனைகளை மேற்கொள்ளச் சென்றிருந்தனர்.

அப்போதே சிற்றாலயத்தில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் ஓரடி மற்றும் மூன்று அடி உயரம் கொண்ட அந்தோனியார் திருச்சுரூபங்கள் உடைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து உடனடியாக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக கொக்குப்படையான் கிராம மக்கள் தெரிவித்தனர்.

---

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்பகுதியில் உள்ள புடவை விற்பனை நிலையமொன்றுசேதமாக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காகக் காத்திருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினன் தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்த விற்பனை நிலையம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விற்பனை நிலையத்தின் கண்ணாடிக் கதவுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. புடவை விற்பனை நிலையத்தின் உரிமையாளரும் தாக்குதலுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் புடவை விற்பனை நிலைய உரிமையாளரினால் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

## நோட்டன் பிரிட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட மண்சரிவிலே இரண்டு பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய சஞ்சீவ விலமவீர என்பவர் இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

அதிக மழை காரணமாக குறித்த பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அப்பகுதியிலிருந்து நேற்று பிற்பகல் வெளியேற்றப்பட்டனர்.




## செய்தித் திருத்தம்

'கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுவதை ஏற்கமுடியாது; சிறீதரன் எம்.பி. காட்டம்' – என்ற தலைப்பில் நேற்றுக் காலை 'காலைக்கதிர்' நாளிதழில் நான்காம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து யாழ். இந்துக் கல்லூரி அதிபர் தெளிவுபடுத்தல் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் காரியாலயம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சிறீதரன் எம்.பி. இவ்வாறு தெரிவித் துள்ளார் என நேற்றுப் பிரசுரமான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த நிகழ்வில் பங்குபற்றிய பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

கல்லூரி நிகழ்வில் உரையாற்றும் போது அத்தகைய கருத்து எதையும் வெளியிடவில்லை. அந்நிகழ்வில் அவர் அப்படிக் கருத்துத் தெரிவித்தார் என செய்தி பிரசுரமானமையால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம். (ஆ– ர்)

---

இந்நிலையில் வீட்டில் இருந்த மீன் தாங்கியை எடுக்கச் சென்றவரே இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டு காணாமல் போயுள்ளார்.

பின்னர் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் மண்சரிவில் சிக்குண்டு கிடந்தவரை சடலமாக மீட்டு நேற்று முன்தினம் இரவு பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர் என நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## மலையகத்தில் சீரற்ற ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி – கெட்டபுலா அக்கரவத்த பகுதியில் வெள்ளத்தில் சிக்கி பெண்ணொருவரும் ஆண்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர்.

மேலும் நேற்று அம்பகமுவ பொலிஸ் பிட்டி பகுதியில் 5 வயது சிறுமி ஒருவரும் அவரது பாட்டியும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

---

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

30 முதல் 59 வயதுக்கிடைப்பட்ட 2 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 5 பேரும் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி இதுவரை பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 16ஆயிரத்து566ஆக அதிகரித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## அரசியல் தீர்வு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றுகூடி செயற்படுத் தப்படவேண்டிய வழிமுறைகளையும் செயற்படவேண்டிய திட்டங்களையும் வகுத்துச் செயற்படுவதே எம்மினத்துக் காகத் தமது உயிரையும் உடைமைகளை யும் ஈந்தவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையும் கௌரவ முமாகும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

இலங்கையில் சிங்கள இனவாதம் என்பது நூற்றாண்டு பழமைவாய்ந்தது. சிங்கள பௌத்தத்தின் மறுமலர்ச்சியாளர் என்று கருதக்கூடிய அநாகரிக தர்மபால என்ற பௌத்த துறவி நூறாண்டுகளுக்கு முன்னராகவே சிங்களவர்களே மண் ணின் மைந்தர்கள் என்றும், தமிழர்கள், மலையாளிகள், முஸ்லிம்கள் ஆகியோர் இந்த நாட்டுக்கு வந்தேறு குடிகள் என் றும், அவர்கள் மீள தமது நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் கோரியி ருந்தார். இதே நிலைப்பாட்டையே இன்றி ருக்கக்கூடிய பௌத்த பிக்குகளும், தென் னிலங்கையின் இடது - வலது அரசியல் வாதிகளும் கொண்டிருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கை என்பது சிங்கள பௌத்தர் களுக்குரியது, புத்தரால் ஆசீர்வதிக்கப் பட்டது என்ற கருத்துருவாக்கம் நாளாந் தம் சிங்கள மக்கள் மத்தியில் நடைபெற் றுக்கொண்டிருக்கின்றது. இந்த அடிப் படையில்தான் வடக்கு - கிழக்கு மாகா ணங்களில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள், சைவ வழிபாட்டுத்தலங் கள், நெல்வயல்கள், மேய்ச்சல் தரைகள், குடிமனைகள் போன்றவை ஆக்கிரமிக் கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும் பௌத்தசின்னங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றிலிருந்து தமிழ் மக்களின் இருப்பை, மொழியை, கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்காகவும் தமிழ் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதற்காகவும் இந்த நாட்டில் சமஷ்டி அரசமைப்புமுறை ஒன்று அவசியம் என்பதைத் தமிழ்த் தலைவர்கள் ஒரு கோரிக்கையாக முன் வைத்தனர். அதனைத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு அவர்களைப் பெரும் பான்மையாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பியும் வந்தனர். சிங்கள அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் ஓரிரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதி லும் அவை ஒருதலைப்பட்சமாக சிங்க ளத் தலைமைகளால் கிழித்தெறியப் பட்டன. எல்லா வழிகளும் பொய்த்துப் போக, பிரித்தானியரிடம் நாம் இழந்து போன இறையாண்மையை மீளப்பெற் றுக்கொள்வதே தமிழ் மக்களின் இருப் பைப் பாதுகாக்க ஒரேவழி என்ற முடிவுக் குத் தந்தை செல்வாவின் தலைமை யிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வந்தது. அதுவே பின்னர் வட்டுக்கோட்டை தீர்மானமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இழந்துபோன இறையாண்மையைப் பெற்றுக்கொள்வதற்குத்தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் சரியான மூலோபாயங் களோ, தந்திரோபாயங்களோ இல்லாதி ருந்ததுடன், அதனை அடைவதற்கான ஒரு வழி வரைபடமோ அல்லது திட்டங் களோ இருக்கவில்லை. ஆனால், தமிழ் இளைஞர்கள் அதற்கான திட்டங்களை வகுத்தார்கள்.

அடக்குமுறைகளிலிருந்து விடுவிக் கப்பட்டு ஒரு சுதந்திர பூமியில் வாழ்வதற்கு கனவு கண்டார்கள். அந்தச் சுதந்திர பூமியானது சமத்துவமான, சகோதரத் துவமான, செழிப்பான எமது எதிர்கால சந்ததியினர் இன்னும் பல்லாண்டு இந்த மண்ணில் நீடித்து வாழ்வதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்றும் சிந்தித்தனர். இதனடிப்படையில், பல நாடுகளுடன், பல விடுதலை இயக் கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத் திக்கொண்டனர்.

பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். வெளிநாட்டு விடுதலை இயக்கங்களுக்கு பயிற்சி வழங்கும் அளவுக்கு தம்மை வளர்த்துக்கொண்டனர். அரசின் ஆயுத ரீதியிலான அடக்குமுறைகள் அதிகரிக்க தமிழ் இளைஞர்களும் தற்காப்பு நட வடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுவே பாரிய உரிமைப் போராட்டமாக மாற்றமடைந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்த எமது விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் சர்வதேச நாடுகளின் துணை யுடன் முறியடிக்கப்பட்டது. ஆனால், இன முரண்பாடுகள் அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இப்போது எமது போராட்ட களங்களும் வழிமுறைகளும் மாற்றமடையவேண்டும். இன்றிருக்குக் கூடிய உள்நாட்டு, பிராந்திய, சர்வதேச நிலைமைகளைக் கணக்கிலெடுத்து, எமது மூலோபாய தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், எமது கொள்கைகளைத் தொலைத்து வெறும் நாடாளுமன்ற, மாகாண சபைகளுக்கான ஆசனங்க ளைக் கவனத்திலெடுத்து அந்த அடிப் படையில் அரசியல் காய்நகர்த்தலைச் செய்கின்ற தமிழ்த் தேசியம் பேசும் தலை மைகளின் போக்கை விடுத்து, ஒரு நூற் றாண்டுக்கு மேலாக, சிங்கள பௌத்தத் தைத் திணித்து தமிழ் மக்களை அழித் தொழிக்கும் வேலைத்திட்டங்களை முதன்மைப்படுத்தும் அரசுகளை நாம் வகுத்துக்கொண்ட மூலோபாய, தந்தி ரோபாயங்களுக்கமைய கையாளும் நோக்குடன் செயற்படவேண்டும்.

எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்து 2009ஆம் ஆண்டுவரையில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தமது உரி மைகளுக்காக தமது இளமையை ம றந்து தமது வசந்தகாலங்களை புறந் தள்ளி தமது உயிர்களைக் கொடுத்து, விடுதலைக்காகப் போராடினார்கள். ஆனால், இன்றிருக்கின்ற பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் அதன் தலைவர் கள், முக்கியஸ்தர்கள் இத்துணை தியா கங்களை தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்துகிறார்களா? அல்லது இத்தி யாகங்களுக்கு நீதிசெய்யும் வகையில் ஒன்றுபட்டு தீர்வை நோக்கி நேர்மை யுடனும் கொள்கைப் பிடிப்புடனும் செயற் படுகிறார்களா என்ற ஏக்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக இருக்கின்றது.

தந்தை செல்வா பிரேரித்த சமஷ்டி அரசமைப்பு முறை, அதன் பின்னர் அவர் பிரேரித்த தனிநாட்டுக்கான 1976ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைதீர் மானம், வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்ற பல்வேறு தமிழ் இயக்கங்கள் நடாத்திய ஆயுதப்போராட்டம் எல்லாம் முடிவுக்கு வந்த நிலையில், மீண்டும் சமஷ்டி (கூட்டாட்சி) என்றும் கூட்டு சமஷ்டி (இணைப்பாட்சி) என்றும் இருதேசம் ஒருநாடு என்றும் புதிது புதிதாக பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்படு கின்றன. ஆனால், இவற்றை அடைவதற் கான வழிவரைபடமோ மூலோபாயங் களோ, தந்திரோபாயங்களோ இவர்க ளிடமும் இல்லை.

நீண்டகால இலக்கையும் குறுகியகால இலக்கையும் திட்டமிட முடியாதவர்களா கவும் கையில் உள்ள அதிகாரங்களை தக்கவைத்து, அதனூடாக தமிழ் மக்க ளுக்கு நம்பிக்கையை உருவாக்கி நீண்ட கால இலக்கை அடைவதற்கான திட் டமிடலைச் செய்ய முடியாதவர்களாகவுமே இவர்கள் உள்ளனர். அதுமாத்திரமல் லாமல் களத்திலும் புலம் பெயர்ந்தும் இருக்கின்ற சில அறிவுஜீவிகளும் கருத் துருவாக்கிகளும் கட்சிகளினது ஆற்றல் களையும் பற்றுறுதியையும் பகுப்பாய்வு செய்யாமல் தேசிய இனவிடுதலையின் மேல் கொண்ட பற்றுதலின் காரணமாக எல்லாவிதமான குழுக்களையும் கட்சிக ளையும் ஒரே மட்டத்தில் வைத்துப் பார்க் கின்ற போக்கையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமைகள் மாற் றப்படவேண்டும்.

அனைத்து சக்திகளும் இணைந்த கலந்துரையாடல்களினூடு நீண்டகால குறுகியகால செயற்றிட்டங்கள் வகுக்கப் படவேண்டும். அவற்றை நடைமுறைப்ப டுத்துவதற்கான வழிவரைபடங்கள் உரு வாக்கப்படவேண்டும். குறுகிய அரசியல் இலாப நோக்கங்களைக் கைவிட்டு பரந்துபட்ட தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக சிந்திக்கும் கலாசாரம் உரு வாக்கப்படவேண்டும். நாடு மிக மோச மான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் இந்த காலகட்டத்தில் அவற்றை முதன்மைப்படுத்தி அதனூ டாக இயலக்கூடிய அதிகபட்ச அதிகாரங் களை இடைக்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கான உபாயங்கள் வகுக்கப் படவேண்டும்.

அடித்தால் மொட்டை வைத்தால் குடுமி என்ற கணக்கில் சிந்திக்காமல். இடைக்காலத்தில் சாதிக்கக்கூடியவற் றைச் சாதித்துக்கொண்டு, பெற்றுக் கொள்ளக்கூடியவற்றைப் பெற்றுக் கொண்டு இறுதி இலட்சியத்தை நோக்கி முன்னேறுவோம் - என்றுள்ளது.

---

## சர்வ கட்சி …

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் மகா நாயக்கர்கள் உள்ளிட்ட மதத்தலைவர் கள், சிவில் அமைப்புகள், இளைஞர் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து மக்க ளும் மிகுந்த நம்பிக்கையுடனும் மறறும் எதிர்பார்ப்புடனும் உள்ளனர் என ஜனா திபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள் ளிட்ட ஆளுங்கட்சியை பிரதிநித்துவப் படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் முதற்சுற்று கலந்துரை யாடலில் கலந்து கொண்டனர். இலங் கைத் தொழிலாளர்கள் காங்கிரஸ் இரண் டாவது கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தது.

மூன்றாவது கலந்துரையாடல் தேசிய காங்கிரஸுடன் இடம்பெற்றுள்ளது. அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பி னர் ஏ.எல்.எம் அதாவுல்லா உள்ளிட்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந் தனர்.

இதேவேளை, சர்வகட்சி அரசாங் கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதி பதி இன்றைய தினம் மேலும் சில அர சியல் கட்சிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந் திர கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு உள் ளிட்ட கட்சிகள் இன்றைய கலந்துரையா டலில் கலந்துகொள்ள இணக்கம் தெரி வித்துள்ளன என ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, ஜனாதி பதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சட் டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோரும் இந்தக் கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்டுள்ளனர்.

இதே வேளை, இன்று மாலை நடை பெறும் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பத்து நாடாளுமன்ற உறுப் பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தச் சந்திப்பில் பங்குபற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் அழைக்கப்பட்டார் எனி னும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்கான போக்குவரத்து வசதி யின்மையால் அவர் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிய வந்தது.

---

## ‘மொட்டு’ உறுப்பினர்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

42 வயதுடைய சுமுது ருக்ஷான் என்ப வரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள் ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரு வர்துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லேரியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தித் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள் ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

---

## 100 நாள்கள் …

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையை அண்மித்த ஊதிர வைரவர் ஆலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

முதலாம் திகதி மன்னாரில் ஆரம்பிக் கப்பட்ட இந்தப் போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றது.

# ‘ரெட்டா’ பிணையில் விடுதலை



காலிமுகத்திடல் போராட்டக்குழுவைச் சேர்ந்த சமூக ஊடகச் செயற்பாட்டாளர் ‘ரெட்டா’ என்றழைக்கப்படும் ரதிந்து சேனாரத்ன பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றம் நேற்று அவருக்குப் பிணை வழங்கியுள்ளது.

போராட்டக்களத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அவர் நேற்று முன்தினம் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்த போதே கைதுசெய்யப்பட்டார்.

இதையடுத்து நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

---

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்’ எனும் தொனிப்பொருளில், வடக்கு கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுழற்சி முறையில் இந்த போராட்டம் இடம்பெற வுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய போராட்டத்தில் கிராம அடிப்படை அமைப்புக்கள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள், சிவில் அமைப் புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டி ருந்தனர்.

இதன்போது ஏ9 வீதியின் ஓரத்தில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. தொடர்ந்து மக்கள் அமைதி யான முறையில் அமர்ந்திருந்து கவன வீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

---

## யாழில் இருந்து …

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்மேடு காவல் சரகம், சிறுதலைக்காடு மீனவக்கிராமத்தில் இருந்து தொலைபேசி மூலம் இலங்கை நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் வந்துள்ளனர் எனக் கிடைத்த தகவலின் பேரில் விசாரணை நடத்தப்பட்டது.

சக்கோட்டையைச் சேர்ந்த றொபின் சன் என்பவருக்கு சொந்தமான மீன்பிடிப் படகில் கடந்த 31 ஆம் திகதி மதியம் பலாலி மீனவக் கிராமத்தில் இருந்து இரு வர் புறப்பட்டுள்ளனர்.

அப்படிப் புறப்பட்ட வி.ஜெனார்தனன் (வயது 28 - இன்பசிட்டி) மற்றும் கா. ஜெசி கரன் (பலாலி) ஆகிய இருவரும் தற்போது இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முதலாம் திகதி 03.00 மணியளவில் இந்திய சர்வதேச எல்லை அருகே மீன் பிடித்துக் கொண்டு இருந்த போது படகு கவிழ்ந்ததில் இருவரும் பிளாஸ்டிக் வெற் றுக்கானைப் பிடித்து உயிர்தப்பியுள்ளனர் என்று கூறப்பட்டது.

நேற்று நு2 ஆம் திகதி காலை 07.00 மணிக்கு சிறுதலைக்காடு கடற்கரைக்கு வந்த இவர்களை தமிழ்நாடு மீனவப் படகு ஒன்று மீட்டு நேற்றுப் பிற்பகல் 2 ம ணிக்குக்கரைக்குக் கொண்டுசென்றதாக வேதாரண்யம் கடற்கரை காவல் நிலை யத்தில் முதல் நிலை வாக்குமூலத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதும் இவர்கள் பயணித்த படகு மூழ்காது தமிழ்நாட்டின் கரையை அடைந்து பிறிதொரு இடத்திற்குச் சென் றுள்ளதாக விசாரணையாளர்களுக்குத் தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டது. கடத்தல் சம்பந்தமாகவே தாங்கள் அங்கு வந்தனர் என இருவரிடமும் தனித்தனி யாக மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் ஒப்புக்கொண்டமையின் பெய ரில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. இருவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்கள் கருத்தைக் கேளுங்கள்!

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் பங்காளியாக இணைய வேண்டும்." – என்று நேற்று மீண்டும் அமைச்சராகப் பதவியேற்ற மூத்த அரசியல்வாதியான நிமால் சிறிபால டி சில்வா கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.**

**இந்தக் கோரிக்கை முன் அவசரமான ஒன்றாகவே தோன்றுகின்றது.**

**இன்னும் சர்வகட்சி அரசு அமைப்பதான திட்டவட்டமான முடிவோ, அழைப்போ வரவில்லை என்பதை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உட்பட அனைத்து தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**நாட்டில் பொருளாதார, சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான சர்வகட்சிகளின் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் பங்குபற்றுமாறுதான் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருக்கின்றார்.**

**அத்தகைய தேசிய திட்டத்துக்கு – சர்வகட்சிகள் இணைந்து எடுக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு – முழு ஆதரவு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுத்தில் உறுதியளித்திருக்கின்றார்.**

**அந்தத் தேசியத் திட்டம் என்ன, அதன் கீழ் தயாரிக்கப்படும் குறைந்த பட்ச பொது இணக்கப்பாட்டு வேலைத் திட்டம் யாது, அதன் அங்கமாக சர்வகட்சி அரசு ஒன்று ஏற்படுத்தப்படுமா என்பவை எல்லாம் இனித்தான் கட்டவிழ வேண்டியவை.**

**அவை பேச்சு மேசைக்கு – அல்லது பகிரங்க ஆய்வுக்கோ, பரிசீலனைக்கோ, கவனத்துக்கோ – வரும் போதுதான் அது குறித்து முடிவெடுத்து, பங்களிப்பது குறித்து தமிழ்க் கூட்டமைப்பு உட்பட்ட தரப்புகள் தீர்மானிக்க வேண்டியிருக்கும். இப்போது அல்ல.**

**இப்போது ஜனாதிபதி தேசிய வேலைத் திட்டம் குறித்துத்தான் பிரஸ்தாபிக்கின்றார். ஆகவே அது குறித்துத்தான் பதிலளிக்க வேண்டும். பதிலளித்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

**அந்தத் திட்டத்தின் கீழ் சர்வகட்சி அரசு ஒன்றை அமைக்கும் தனது யோசனையை உரிய மட்டத்தில் – பெரும்பாலும் இன்று – ஜனாதிபதி கட்டவிழ்க்கக் கூடும். அப்போது அதில் பங்களியாவதா, வெளியில் இருந்து ஆதரவு தருவதா என்பது குறித்துத் தமிழர் தரப்பு தீர்மானிக்கலாம். தீர்மானிக்க வேண்டியிருக்கும்.**

**ஆயினும், இப்போதைய உத்தேச முன்நகர்வு விரைவில் அந்தக் கட்டத்தை நோக்கி – சர்வகட்சி அரசு அமைக்கும் முயற்சிகளை நோக்கி – நகரும் என்பது சாத்தியமானதே.**

**அச்சமயத்தில் – ஒரு கட்டத்தில் – இத்தகைய உத்தேச சர்வட்சி அரசில் பங்காளியாவதா அல்லது வெளியில் இருந்து ஆதரவு வழங்குவதா, அல்லது வெறுமனே பார்த்திருப்பதா என்ற முடிவை கூட்டமைப்பு எடுக்க வேண்டியிருக்கும்.**

**அத்தகைய முடிவு எடுக்க வேண்டிய கடைசி நாள் வரைக் காத்திருந்து விட்டு, கடைசி நாளில் கொழும்பில் சம்பந்தன் வீட்டில், கூட்டமைப்பு எம்.பிக்கள் மட்டும் கூடி, இந்தியா சொன்னது, அமெரிக்கா வற்புறுத்தியது என்று சங்கடங்களைக் கூறி சிக்கலான முடிவுகளை எடுப்பதை விடுத்து, இப்போதே பிரதேச மட்டத்தில் மக்கள் உரையாடல்களை – உசாவல்களை – நடத்தி, மக்களினதும் கட்சித் தொண்டர்களினதும் கருத்து நிலைப்பாட்டை அறியும் நடவடிக்கையை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் ஆரம்பிப்பது நல்லது. அதுவே முறையும் கூட.**

# இலங்கையில் வேகமாக மாற்றமடைந்துவரும் நிலைவரத்தை உன்னிப்பாக அவதானிக்றோம்!

### பிரிட்டன் வெளிவிவகார பொதுநலவாய இணை அமைச்சர் கூறுகிறார்



இலங்கையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை உட்பட வேகமாக மாற்றமடைந்து வரும் நிலைவரத்தை உன்னிப்பாக அவதானிப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய அரசியல் பொருளாதார சவால்களுக்கு அனைத்து தரப்பினரையும் ஜனநாயக ரீதியில் அமைதியான அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய தீர்வைக் காணுமாறு ஊக்குவிக்கின்றது என பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய இணை அமைச்சர் அமன்டா மில்லிங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை உட்பட வேகமாக மாறிவரும் சூழ்நிலையை உன்னிப்பாக அவதானிக்கின்றோம். அனைத்துத் தரப்பினரையும் சட்டத்தின் ஆட்சியை மதிக்குமாறும் வன்முறைகளைப் பின்பற்றவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற பன்னாட்டு அமைப்புகளின் மூலம் பிரிட்டன் உதவிகளை வழங்குகின்றது. சர்வதேச நாணயநிதியத்தில் பிரிட்டன் ஐந்தாவது பெரிய பங்குகளை கொண்டுள்ளது. ஐ.நாவிற்கும் உலக உணவு ஸ்தாபனத்துக்கும் அது பெரும் பங்களிப்பை வழங்குகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் பிரிட்டனிற்கு குறிப்பிடத்தக்க குரல் உள்ளது. இலங்கையின் கடன்நெருக்கடிக்கான தீர்வுகள் தொடர்பாக சக பாரிஸ் கழக உறுப்பினர்கள் உலக வங்கி உட்பட பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் ஆய்வு மாநாடு இன்று

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 3 ஆவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை 2020 ஆம் ஆண்டு முதல் அனைத்துலகத் தமிழியல் மாநாட்டை நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற இந்த மாநாட்டுக்கான நிதியுதவியைக்கந்தையாகார்த்திகேசன் அறக்கொடை நிதியமே வழங்கி வருகின்றது. 'வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்' என்ற கருப்பொருளிலும் 'பன்முக நோக்கில் சங்க இலக்கியம்' என்ற கருப்பொருளிலும் இரண்டு மாநாடுகளும் மிகச் சிறப்பாக நடந்தேறின. இந்தவருடம் மூன்றாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு இன்று (புதன் கிழமை) 'ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும் 20ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது' என்ற கருப்பொருளில் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாக இருக்கின்றது.

ஈழத்துப்பூதன்தேவனாருடன் தொடங்கும் ஈழத்து இலக்கியப் போக்கையும் தமிழியல் மரபையும் இயன்றளவு விரிவாகவும் ஆழமாகவும் நோக்குவதற்கு இந்த மாநாட்டின் கருப்பொருள் ஏற்றதொரு தளமாக அமைகின்றது. விரிவான தகவல்களைத் தேடும் ஆய்வுத்தளங்களும் அறிவியல்பூர்வமான தரவுச் சான்றுகளும் இன்று மிகவும் வேண்டப்படுகின்றன. இவற்றின் மூலமே ஈழத்துத் தமிழியல் மரபையும் மாற்றத்தையும் எமது இளந்தலைமுறையினருக்குத் தெளிவாகக் கையளிக்கமுடியும். அந்தவகையில் தமிழ்நாட்டு ஆய்வாளர்களையும் உள்ளடக்கி 39 ஆய்வுக்கட்டுரைகள் கலை, இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல் முதலிய பல்வேறு துறைகளின் நுழைபுல அறிவுடன் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்தக் கட்டுரைகளை உள்ளடக்கி மிகப் பெரும் மாநாட்டு மலரும் வெளியிடப்பட இருப்பதும் சிறப்பம்சமாகும்.

இந்த மாநாட்டுக்கான திறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் மேனாள் தலைவரான கலாநிதி எஸ். சிவலிங்கராஜா 'தமிழ் நவீனமயமாக்கத்துக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு' என்ற தலைப்பிலே ஆற்ற இருக்கின்றார். இந்த உரை ஈழத்துப் புலமையாளர்கள் மீதான புத்தொளியைப் பாய்ச்சும் ஆய்வுரையாக அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாநாட்டில் 'வரலாற்றில் முன்னேற்றம்' என்ற தலைப்பிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகைசால் பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ.சண்முகதாஸ் ஆற்றிய திறப்புரை இம்மாநாட்டில் தனிநூலாக வெளியிடப்படுவதும் முக்கியமானது.

இந்த மாநாட்டில். கல்லடி வேலுப்பிள்ளையின் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி', சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' ஆகிய இரண்டு அரிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இதற்கு முன்னர் சோமசுந்தரப் புலவரின் சிறுவர் செந்தமிழ், ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் உரையுடனான திருவாதவூரடிகள் புராணம், தஞ்சைவாணன் கோவை ஆகியவை பதிப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலவசப்பிரதிகளாக இவை மக்கள் மயப்படுத்தப்படுவதும் ஆவணமாவதும் கவனத்திற்குரியது.

இரண்டாவது மாநாட்டில் இருந்து தமிழ்ப் புலமையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். அந்தவகையில் தமிழுக்குப் பணியாற்றிய மரபுசார் தமிழ் அறிஞர்கள் எழுவர் சென்ற மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார்கள். இந்தவகையில் இந்த ஆண்டும் நான்கு மரபுசார் தமிழ் ஆளுமைகள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இம்மாநாட்டில் கௌரவம் பெறும் நால்வரும் பண்டிதர்கள் என்பதும் பெண்கள் என்பதும் இன்னொரு சிறப்பம்சமாகும். புனிதவதியார் சிவக்கொழுந்து, மங்கையற்கரசி நடராசா, செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், வள்ளியம்மை சுப்பிரமணியம் ஆகியோரே இச்சிறப்பைப் பெறுகின்றார்கள்.

மேலும் இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார். அத்துடன் அரங்க நிகழ்வின் சிறப்பம்சமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையினரின் சிறப்பு நடன அளிக்கை இடம்பெற இருக்கின்றது.

பி.ப. 2 மணி முதல் 4.30 மணி வரை ஆறுமுகநாவலர் அரங்கு ஈழத்துப் பூதன் தேவனார் அரங்கு, கல்லடி வேலுப்பிள்ளை அரங்கு, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அரங்கு ஆகிய நான்கு அரங்குகளில் 39 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் இம்மாநாட்டில் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

# இந்தியாவில் உள்நாட்டில் தயாரான முதலாவது விமானத் தாங்கிக் கப்பல்

## களத்துக்கு வருகிறது ‘ஐ.என்.எஸ். விக்ராந்த்’



இந்தியாவில் தயாரான முதல் உள்நாட்டு விமானம் தாங்கிக் கப்பலான ‘ஐ.என்.எஸ். விக்ராந்த்’தை இயக்குவதற்கான இறுதிக் கவுண்டவுன் இப்போது தொடங்கியுள்ளது, கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி (இந்திய) ரூபா செலவில் கட்டப்பட்ட 45,000 தொன் போர்க்கப்பல் கொச்சி கப்பல் கட்டும் தளத்தால் கடற்படைக்கு வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இது தொடர்பான விருத்தியில், ஹெல்பயர் ஏவுகணைகள், நீரை ஊடுருவிச் செல்லும் ஏவுகணைகளான ‘எம்.கே 54’ ரக டோர்பிடோக்கள் மற்றும் துல்லியமாக ரொக்கெட்டுக்களை அழிக்கும் ஆயுதங்கள் போன்றவற்றைத் தாங்கிய – நீர்மூழ்கிக் கப்பலை வேட்டையாடும் – எம்.எச்.60 ரக ‘ரோமியோ’ ஹெலிக்கொப்டர்கள் 24 இல் முதல் இரண்டு, அமெரிக்காவிலிருந்து கொச்சிக்கு வந்தன. இதில் மூன்றாவது அணி அடுத்த மாதம் வரவிருக்கிறது.

அனைத்து 24 ஹெலிக்கொப்டர்களும், மல்டி – மோட்ரேடார்கள் மற்றும் நைட் – வின் சாதனங்களுடன், பெப்ரவரி 2020 இல் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட ரூ. 15 ஆயிரத்து 57 கோடி (2.13 பில்லியன்) ஒப்பந்தத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்குள் வந்து சேரும். இந்த எம்.எச்.60 ரக ‘ரோமியோ’ ஹெலிக்கொப்டர்கள் உள்நாட்டுத் தயாரிப்பு விமானம் தாங்கி கப்பலிலிருந்து செயல்படுவதால் அந்தக் கப்பல் மற்ற முன்னணி போர்க்கப்பல் போன்று பணியாற்றும்.

30 போர் விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட – 262 மீற்றர் நீளமும்



62 மீற்றர் அகலமும் கொண்ட – உள்நாட்டுத் தயாரிப்பு விமானத் தாங்கிக் கப்பல் இந்த ஓகஸ்ட் இரண்டாம் பாதியில் பயன்பாட்டுக்கு வரும்.

1971 போரின்போது முக்கிய பங்காற்றிய – 1997ல் பணிநீக்கம் செய்யப்பட்ட – இந்தியாவின் முதல் விமானம் தாங்கிக் கப்பலுக்கு 1961 இல் இங்கிலாந்திடம் இருந்து அது வாங்கப்பட்ட பின்னர் ஐ.என்.எஸ். விக்ராந்த் என்று பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பெயரே இப்போது உள்நாட்டுத் தயாரிப்பு விமானத் தாங்கிக் கப்பலுக்குச் சூட்டப்படுகின்றது.

மொத்தம் 88 மெகாவாட் சக்தி கொண்ட நான்கு எரிவாயு விசையாழிகளால் இயக்கப்படுகிறது இந்த உள்நாட்டுத் தயாரிப்பு விமானத் தாங்கிக் கப்பல். அது 76 வீதம் உள்நாட்டு உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. இது பெண்கள் உட்பட 1,700 பணியாளர்களைக் கொண்டிருக்கும். மேலும் 18 கடல் மைல் வேகத்தில் சுமார் 7,500 கடல் மைல்கள் செயல்படும்.

கடந்த ஓராண்டாக கடற்படை நீண்ட காலதாமதமான உள்நாட்டுத் தயாரிப்பு விமானத் தாங்கிக் கப்பலின் விரிவான கடல் சோதனைகளை நடத்தியிருந்தாலும், மிக் – 29கே போர் விமானங்கள் மற்றும் கமோவ் – 31 மற்றும் எம்.எச். – 60 ஆர். போன்ற ஹெலிக்கொப்டர்களின் விமான சோதனைகள் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கும். . உண்மையில், 2003 ஜனவரியில் அரசாங்கத்தால் முதன்முதலில் அனுமதிக்கப்பட்ட இந்தக் கப்பல் தயாரிப்புத் திட்டம் 2023 ஆம் ஆண்டின் மத்தியில் மட்டுமே முழுமையாகச் செயல்படும்.

இதற்கு நேர்மாறாக, இந்தியாவின் 130 – போர்க்கப்பல் படையுடன் ஒப்பிடுகையில், சீனா ஏற்கனவே 355 போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களுடன் உலகின் மிகப்பெரிய கடற்படையைக் கொண்டுள்ளது, மேலும் அதன் மூன்றாவது விமானம் தாங்கிக் கப்பலான 80,000 தொன் புஜியானை கடந்த மாதம் அது செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அதன் இருப்பை அதிகரித்துக்கொண்டே, நான்காவது கப்பல் தொகுதியையும் அது வேகமாக உருவாக்கி வருகிறது.

புஜியானானது CATOBAR (catapult assisted take - off but arrested recovery) உள்ளமைவைக்கொண்டது. கொத்தாகப் போர் விமானங்களைக் கையாண்டு, கண்காணித்து, முன்னெச்சரிக்கை



வழங்கி, வழிநடத்தும் எலக்ட்ரானிக் யுத்தக் கட்டமைப்புப் போன்றவற்றையும் அதன் டெக்கில் இருந்து அதிக எடை கொண்ட விமானங்களை ஏவுவதற்கான கட்டமைப்பையும் கொண்டது.

அமெரிக்கா, அணுசக்தியால் இயங்கும் ஒரு லட்சம் தொன் எடை கொண்ட 11 ‘சுப்பர்’ கப்பல் தொகுதிகளைக் கொண்டுள்ளது, அவை ஒவ்வொன்றும் 80 – 90 போர் விமானங்கள் மற்றும் விமானங்களைக் கொண்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்திய அரசாங்கம் மூன்றாவது கப்பல் தொகுதியை உருவாக்குவதற்கான பூர்வாங்க அனுமதியைக் கூட வழங்கவில்லை. அதற்கு ஒரு தசாப்தத்திற்கும் மேலாகக் காலம் எடுக்கும்.

மேலும், தற்போதுள்ள 44,500 தொன் எடையுள்ள ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா, 2013 நவம்பரில் 2.33 பில்லியன் டொலருக்கு 45 மிக் 29கே விமானங்களுடன் மற்றொரு 2 பில்லியனுக்கு ரஷ்யாவில் இருந்து சேர்க்கப்பட்டது.

அதே போல் உள்நாட்டுத் தயாரிப்பு விமானத் தாங்கிக் கப்பலானது போர் விமானங்கள் தங்கள் சொந்த சக்தியின் கீழ் புறப்படுவதற்கான கோணஸ்கை – ஜம்ப்களை மட்டுமே கொண்டுள்ளன. STOBAR (குறுகிய புறப்பாடு, ஆனால் தடுக்கப்படும் இறங்குகை) நடவடிக்கைகளில் இது கனமான விமானங்களை இயக்குவதில் இருந்து அவர்களை கட்டுப்படுத்துகிறது.

**(மூலம்: ‘ரைம்ஸ் ஒவ் இந்தியா’)**

# நீர் முகாமைத்துவக் கூட்டுச் செயற்பாடுகளில் பங்காளிகளாகின்றன இந்தியாவும் இஸ்ரேலும்



நாளை 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை புது டெல்லியில் நடைபெறவுள்ள 17th Everything About Water Expo 2022 – (நீரைப் பற்றிய அனைத்து விடயங்களும் என்ற) கண்காட்சிச் செயலமர்வில் இந்தியாவும் இஸ்ரேலும் பங்குதாரர்களாக இருக்கத் தயாராக இருக்கின்றன என புதுடெல்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

இது இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையே நீர்த் துறையில் நடந்து வரும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்த நிகழ்வில் இஸ்ரேலின் நான்கு உயர்மட்ட நீர் வளத்துறை நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். நீர் மேலாண்மை, கொள்கை விதிமுறைகள், நீர் தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்படுத்தல் மற்றும் இஸ்ரேல் – இந்தியா நீர் கூட்டாண்மை ஆகியவற்றுக்கான இஸ்ரேலிய மாதிரியில் கவனம் செலுத்தும் அமர்வில் அவர்கள் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்வார்கள்.

இன்று இஸ்ரேல் தனது கழிவுநீரில் 90 சதவீதத்தை மறுசுழற்சி செய்கிறது. கழிவு நீர் மறுசுழற்சிக்கு வரும்போது உலக அளவில் இஸ்ரேலே முதலிடத்தில் உள்ளது. நல்ல மேலாண்மை, உயர் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பொதுக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய நீர் நுகர்வுக்கு முழுமையான அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம், இஸ்ரேல் மாற்றமடைந்துள்ளது. நீர் வறண்ட தேசம் இன்று நீர் துறையில் உலகத் தலைவனாகத் திகழ்கிறது என்று தூதரகம் ஒரு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(செய்தி மூலம்:ஏ.என்.ஐ.)**

# புதுக்குடியிருப்பில் பொலிஸாருக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள்!






முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமைக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி இரவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் எரிபொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை பொலிஸார் சுற்றிவளைத்தமை முற்றுகை என்ற கருத்துப்பட செய்திகள் வெளிவந்தன.

இந்தச் சம்பவத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினார்.

இதன்போது அரசாங்க அதிபர் குறிப்பிட்டார் மக்களுக்கு தெளிவுபடுத்தவும் மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காகவும் பொலிஸாருக்கு அலுவலகத்தைதிறந்து காண்பிக்குமாறும்வலியுறுத்தினார்.

அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கு அமைய அலுவலகம் பொலிஸாருக்கு திறந்து காண்பிக்கப்பட்டது. இதில் அலுவலகத்தில் இருந்து மண்ணெண்ணெய் 4.5 லீற்றர், டீசல் 50 லீற்றர் பொலிஸாரால் எடுக்கப்பட்டன.

இதில் 4.5 லீற்றர் மண்ணெண்ணெய் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு பயன்படுத்துவதற்கானது. எடுத்துக்கொள்ளப்பட்ட 50 லீற்றர் டீசல் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக திடீர் என்று எரிபொருள் தட்டுப்பாடு அலுவலகத்துக்கு ஏற்படுமாயின் அதற்கான பாவனைக்கானது.

இதன் பின்னர் பிரதேச செயலாளருக்கு ஒதுக்கப்பட்ட விடுதியில் சோதனை நடவடிக்கையை பொலிஸார் மேற் கொண்டனர். இதன்போது விடுதியில் இருந்து 5 லீற்றர் மண்ணெண்ணெய், 10 லீற்றர் பெற்றோல் இருந்துள் ளது அதனையும் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

விடுதியில் இருந்த 5 லீற்றர் மண்ணெண்ணெய் பிரதேச செயலாளரின் அன்றாட சமையல் மற்றும் மின்சாரம் துண்டிப்பு நேரங்களில் விளக்குக்காகப் பயன்படுத்தப்படுவதாகும். விடுதியில் இருந்த 10 லீற்றர் பெற்றோல் சாதாரண மக்கள் பெற்றுக் கொள்வது போல் பெற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

பிரதேச செயலாளரின் மோட்டார் சைக்கிளுக்கு பயன்படுத்துவதற்கானது. காரணம் பிரதேச செயலாளரின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் என்பதால் தீடீர் என்று பிள்ளைகளுக்கு ஏதும் அவசரம், வீட்டில் ஏதும் அவசர தேவையிருப்பின் சென்றுவருவதற்கானது. இவற்றையும் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

பலதடவைகள் பொலிஸாருக்கு பிரதேச செயலாளர் எடுத்துச் சொல்லியும் மேலே குறிப்பிட்ட அனைத்து எரிபொருள்களையும் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ள னர். செல்கின்ற போது பிரதேச செயலாளரின் விடுதியில் பிரதேச செயலாளரால் வளர்த்த நாயை வாக னத்தால் அடித்து கொலை செய்துவிட்டுச் சென்றனர்.

பொலிஸார் சோதனையிட முன்னர் பிரதேச செயலாளருக்கு தெரிவித்தனர். என்னவென்றால் மக்கள் திரண்டுள்ளனர் மக்களுக்கு சந்தேகம் உண்டு கண்டிப்பாக அலுவலகம் திறந்து காட்டப்பட வேண்டும் என்ற விடாப்பிடியில் பொலிஸார் நின்றனர். பொலிஸாரின் வேண்டுகோள் அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்டு அவர்களின் பணிப்பில் வெளிப்படைத் தன்மையினைப் பேணும் நோக்கிலும் அலுவலகம் திறந்து காட்டப்பட்டது.

ஆனால் பொலிஸாரின் தகவலுக்கு மாறாக அங்கு மக்கள் திரளவில்லை, ஒருசில தனிநபர்களும் பொலிஸாரும், ஊடகவியலாளர்களுமே நின்றனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.


இந்தச் செயல் பிரதேச செயலாளரிடம் இருந்த தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக ஒரு சிலரின் உந்துதலுக்கு அமைய பொலிஸார் இவ்வாறான செயலை முன்னெடுத்ததோடு, தன்மீது அபகீர்த்தயை ஏற்படுத்துவதற்காக சிலர் முனைகின்றனர் எனவும் பிரதேச செயலாளர் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை ஊடகங்கள் சரியான முறையில் தகவலை உறுதிப்படுத்தாது தகவல் மூல மற்று ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்களை திருப்திப்படுத்துவதற் காக செய்தியை அறிக்கையிட்டுள்ளமை மன வேதனை யைத் தருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளமை அனைவரும் அறிந்த விடயம்.

இந்த செயலைக் கண்டித்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக அனைத்து உத்தியோகத்தர்களும் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட பிரதேச செயலாளருக்கு நீதி கிடைக்க வேண்டும், ஊடகங்கள் ஊடக தர்மத்துடன் இயங்க வேண்டும் என்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எழுப்பினர்.

# நடுக்காட்டில் வைத்திய முகாம்; அடியார்களுக்கு ஜீவ சிகிச்சை





(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காமம் காட்டுப்பாதையில் செல்லும் அடியார்களுக்கு உதவுமுகமாக, நடுக்காட்டில் உள்ள நாவலடி எனுமிடத்தில் வைத்திய முகாம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

காட்டுப்பாதை திறக்கப்பட்ட கடந்த 22 ஆம் திகதியன்று ஆரம்பித்த இந்த வைத்திய முகாம், தொடர்ச்சியாக எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடத்தப்படவிருக்கிறது.

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் டாக்டர் அழகையா லதாகரனின் ஏற்பாட்டில் 12 ஆவது வருடமாக இந்த வைத்திய சேவை நடுக்காட்டிற்குள் நடத்தப்படுகின்றது .

56 மைல் தூரமான காட்டுப் பாதையின் நடுப்பகுதியில் எவ்வித வசதிகளும் இல்லாத இடத்தில் அடியார்களுக்கு இந்த வைத்திய சேவை நடத்தப்படுவது அனைவராலும் வியந்து பார்க்கப்படுகின்றது.

டாக்டர் அ.லதாகரன் தலைமையிலான வைத்தியர்கள் சுகாதாரத் துறை ஊழியர்கள் தமது சொந்த செலவிலேயே அர்ப்பணிப்பான சேவையை இரவு பகல் பாராமல் செய்து வருகின்றார்கள்.

காட்டுப்பாதையில் பல உபாதைகளுடன் நடந்து வருகின்ற அடியார்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

காலிலே ஏற்படுகின்ற நோ மற்றும் சகலவிதமான நோய்களுக்கும் அங்கு தற்காலிக சிகிச்சை வழங்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று அங்கு சிகிச்சை பெற்று சென்றனர்.

நடுக்காட்டுக்குள் எவ்வித வசதியும் இல்லாத நிலையிலே இத்தகைய வைத்திய சேவையை செய்து வருகின்ற டாக்டர் லதாகரன் தலைமையிலான குழுவினருக்கு அடியார்கள் அனைவரும் நன்றி செலுத்தினார்கள். மேலும், நாவலடிக்கு வரும் ஒவ்வொரு அடியார்களுக்கும் நடந்து வந்த களையை போக்குவதற்கு இரண்டு பட்டர்களும் ஒரு வெனிவல் தேனீரும் வழங்கப்படுகிறது. தேவையானால் மேலதிகமாகவும் வழங்கப்படுகிறது.

களைத்து வந்த அடியார்களுக்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமைகிறது.

# எந்த விசேட சலுகைகளும் கோட்டாவுக்கு வழங்கவில்லை!

## சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எந்த விசேட சலுகையையும் வழங்கவில்லை என சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர் பதவி விலகவேண்டும் என உருவான மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து நெருக்கடியில் சிக்கி நாட்டிலிருந்து மாலைதீவிற்கு சென்ற பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

பொதுவாக சிங்கப்பூர் முன்னாள் அரச தலைவர்கள் அல்லது அரசதலைவர்களுக்கு விசேட சலுகைகள்போன்றவற்றை வழங்குவதில்லை என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சிறப்பு சலுகைகள் விடுபாட்டுரிமை போன்றவற்றை வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரிற்கு விஜயம் மேற்கொண்டு இடைத்தங்கல் பயணத்தை மேற்கொண்ட வெளிநாட்டு தலைவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகள் தொடர்பாக சிங்கப்பூரின் தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெரால்ட் சியாம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் ஏதாவது பொதுவளங்களைப் பயன்படுத்தியதா? இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள விவியன் பாலகிருஷ்ணன், ராஜபக்ஷவிற்கு சிறப்பு சலுகைகளையோ விடுபாட்டுரிமையோ விருந்தோம்பலையோ வழங்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தளத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல், பெற்றோலுடன் ஒருவர் கைது





புத்தளம் பகுதியில் எண்ணெய்க் கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 165 லீற்றர் டீசல் மற்றும் 25 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்பபண்ணி கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய திங்கட்கிழமை இரவு புத்தளம்பொலிஸாருடன் இணைந்து ஒயில் கடையை சோதனை நடவடிக்கை மேற்கொண்டபோதே பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது புத்தளம் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச்செல்லாத தனியார் பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து!

கொழும்பு, ஒக. 03

எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லாத தனியார் பஸ்களின் அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படவுள்ளது.

திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி பஸ்களின் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துசபைக்குச்சொந்தமானடிப்போக்களில் எரிபொருள் வழங்கப்படுகின்றது.

எனினும் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் சில தனியார் பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபடுவதில்லை எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சில தனியார் பஸ்கள் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்கின்றன எனவும் இலங்கை போக்குவரத்து சபை அண்மையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

இந்தநிலையிலேயே எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லாத தனியார் பஸ்களின் அனுமதிப்பத்திரம் திங்கள் முதல் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாப் பல்கலைக்கழகத்துக்கு மருத்துவ பீடம் வழங்க கோரிக்கை

வவுனியாபல்கலைக்கழகத்துக்கு மருத்துவ பீடமொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்பேராசிரியர்ஆர்.மங்களேஸ்வரன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.


வவுனியா பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்துவதுடன், வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடமொன்றைநிறுவுவதும்நடைபெற வேண்டும்எனவும்அவர்வலியுறுத்தியுள்ளார்.

வவுனியாபல்கலைக்கழகத்துக்கு ஏற்கனவே புதிய சுற்றாடல் விஞ்ஞான பீடம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருந்த வவுனியா பல்கலைக்கழகம் ஒரு வருடத்துக்கு முன்னர் இலங்கையின் 17 ஆவது பல்கலைக்கழகமாகப் பெயரிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாவரும் வியக்கும் வண்ணம் நற்கதி அடைந்தார்!



காமனைத் தகனம் செய்தார்
கதிர்வேலன் உதிக்க வைத்தார்

பிரம்மமாய் எழுந்து நின்றார்
பெரும்விஷம் எடுத்து நின்றார்
அப்பெரும் அரனார் அருகில்
அணுகிடும் தொண்டர் ஆகி
நிற்கின்ற பெருமை பெற்றார்
நினைப்பதில் களங்கமுற்றார்

அணுகிடும் தொண்டர் மாற்றம்
அரன் உளம் ஏற்கவில்லை
புவியதில் பிறப்பாய் என்று
புகன்றிட்டார் பொறுக்க வொண்ணா
காத்திட வேண்டும் என்று
கைகூப்பிக் கேட்டார் தொண்டர்
கைலையில் இருக்கும் நாதன்
கருணையைப் பொழிவேன் என்றார்

அரனது அணுகு தொண்டர்
அழகெலாம் ஒன்று சேர்ந்து
அவனியில் பிறந்து நின்றார்
அவனருள் வருமென்றெண்ணி
புவிதனில் பிறந்த தொண்டர்
புலனதில் புவியின் தன்மை
படிந்திடும் வண்ணம் ஆங்கே
நடந்தன விதியின் கோலம்

அழகுடை பிள்ளை கண்டு
அரசனும் காதல் கொண்டு
வேண்டினன் பெற்றோர் முன்னால்
விருப்புடன் அணைத்தே நிற்க
அரசனின் விருப்பம் தன்னை
ஆணையாய் கொண்ட பெற்றார்
அரனினை அகத்தில் எண்ணி
அளித்திட்டார் குழந்தை தன்னை

அரண்மனை புகுந்த அந்த
அந்தணப் பிள்ளை அங்கு
விலை மதிப்புள்ள ஆடை
அணிமணி புனைந்து கொண்டு
நிலமதில் மகிழ்ச்சி கொண்டு
நிறைவுடை வாழ்கைப் பெற்று
அரசனாய் ஆகி வந்தார்
அனைவரும் வியந்தே பார்க்க

மண்ணினைத் தொட்ட அன்பர்
மணவினைப் பருவம் எய்தி
மங்கல நாணைப் பூட்ட
வந்தனர் சுற்றஞ் சூழ
யாருமே நினையா வண்ணம்
யாருமே அறியா வண்ணம்
திடீரென ஒருவர் வந்தார்
திருப்பமும் கொடுத்தே நின்றார்

மணமகன் அடிமை என்றார்
சான்றுகள் உளவே என்றார்
சபையிலே சண்டை செய்து
தடுத்தனர் விவாகம் தன்னை
ஆத்திரம் கொண்டார் அன்பர்
அடிக்கவும் சென்றார் முன்னே
பித்தனா நீயும் என்று
பேசினார் சபையின் முன்னே

தடுத்தவர் சளைக்கா நின்றார்
தன்னுரு காட்டி நின்றார்
வெறுத்தவர் விறைத்து நின்றார்
விமலனார் வெளிச்சம் ஆனார்
திட்டிய வார்த்தை கொண்டு
செப்பிடு பாடல் என்றார்
செந்தமிழ் மழையாப் பாடல்
சுந்தரர் கொடுத்தே நின்றார்

பிறவியின் பயனைப் பெற்றார்
பெம்மானின் அருளைப் பெற்றார்
கருணையைக் கொடுத்து நிற்கும்
கடவுளின் நட்பைப் பெற்றார்
உரிமையாய் உதவி கேட்கும்
உயிர் நண்பனாகி நின்றார்
உலகிடை அடியார் கூட்டம்
உய்திட உரமும் ஆனார்

சம்பந்தர் அப்பர் பின்னே
வந்திடும் தகைமை பெற்றார்
நட்பெனும் உறவைக் காட்டி
நாதனைத் தொழவும் செய்தார்
வன்மையாய் பேசி நின்று
வன்தொண்டர் பெயரைப் பெற்றார்
வாழ்வியல் முறையில் புதுமை
புகுத்திய தொண்ட ரானார்

கோலத்தை மாற்றி நின்றார்
ஞாலத்தைப் பார்க்க வைத்தார்
சீலத்தைத் தலைமேற்கொண்டார்
சிவனையே சிந்தை வைத்தார்
ஆலத்தை உண்ட எந்தை
அடியையே பற்றி நின்றார்
ஆலால சுந்தரனாய்
அவனியில் போற்ற நின்றார்

நிந்தையாய் பேசி நின்றார்
நிமலனை நெருங்கி நின்றார்
அஞ்சிடா வகையில் கருத்தை
அள்ளியே வழங்கி நின்றார்
தாமரை இலையின் நீர்போல்
பூமியில் வாழ்ந்தார் வாழ்க்கை
யாவரும் வியக்கும் வண்ணம்
நற்கதி அடைந்தார் நிறைவில்

(சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை. அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.)

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா)




# ஒரு வருட நிறைவை காணும் வவுனியாப் பல்கலைக்கழகம்!

**- ந.லோகதயாளன் -**

வன்னிப்பிரதேசத்தின் உயர் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பணியாற்றி வருகின்ற வவுனியா பல்கலைக்கழகம் தனது முதலாம் ஆண்டு நாளை நிறைவு செய்கின்றது. இது, முதலில் வடக்கு மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு வருடங்களில் 1997 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகமாக பிரயோக விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம் என இரண்டு பீடங்களுடன் தரமுயர்த்தப்பட்டன. பின்னர் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வவுனியா பல்கலைக்கழகமாகப் பரிணமித்தது.

பிரயோக விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம், தொழில்நுட்ப பீடம் என மூன்று பீடங்களுடன் பல்கலைக்கழகமாகத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கியுள்ள இந்த உயர் கல்வி நிறுவனத்தில் நாட்டின் அனைத்து கலாசார, மதங்கள் மற்றும் இனங்களையும் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். முன்னூறுக்கும் மேற்பட்ட கல்விசார், கல்விசாராத ஊழியர்கள் இங்கு பணியாற்றுகின்றார்கள்.

எனினும் இந்தப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவான அளவிலேயே காணப்படுகின்றன. இங்கு அவசியமான கட்டட வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய வேண்டுகைகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான முதலீட்டு நிதியொதுக்கீடுகள் அரசிடமிருந்து கிடைக்கவில்லை. பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டதையடுத்து, இங்கு அவசியமான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க் கப்பட்டது. ஆயினும் நாட்டைத் தாக்கிய கொவிட் 19 நோய்ப் பேரிடர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்துறைக்கு அவசியமான முதலீட்டு நிதியொதுக்கீட்டை அரசு செய்யவில்லை. இது பல்கலைக்கழகத்தினர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும் பற்றாக்குறைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் கடந்த ஒரு வருட காலத்தில் வவுனியா பல்கலைக்கழகம் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றது. அவற்றில் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக (Harmony Centre) நல்லிணக்க நல்லுறவு நிலையம் ஒன்றை இந்தப் பல்




கலைக்கழகம் உருவாக்கி இருக்கின்றது.

பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனைத் துணைவேந்தராகக் கொண்டு பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்ட ஒரு மாத காலத்திலேயே பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இந்த நல்லிணக்க நிலையம் இங்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பது கவனத்திற்கு உரியது. இங்கு பயிலுகின்ற பல்வேறு கலை காலாசாரங்கள் மதங்களைப் பின்பற்றுகின்ற அனைத்து இன மாணவர்கள் மற்றும் இங்கு பணியாற்றுகின்ற ஊழியர்கள் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் நல்லுறவை வளர்ப்பதற்காக இந்த நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

கல்வி பயிலும்போதே இங்குள்ள மாணவர்கள் நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிச் சென்ற பின்னர் நாட்டில் பல்வேறு இன, மத, கலை கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் உருவாக்குவதே இந்த நல்லிணக்க நிலையத்தின் நோக்கம் என பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் கூறுகின்றார்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் வவுனியா பல்கலைக்கழகத்திலேயே முதன் முதலாக இந்த நல்லிணக்க நிலையம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக நாட்டின் ஏனைய பல்கலைக்



கழகங்களிலும் இத்தகைய நல்லிணக்க நிலையங்களை உருவாக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்திருக்கின்றது.

இந்த நிலையத்தின் ஊடாகப் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் 'அரசியலில் பெண்கள்' என்றதொரு கல்வி நெறியை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாக இந்த நல்லுறவு நிலையம் தொடர்பாக விளக்கமளித்த பேராசிரியர் மங்களேஸ்வரன் கூறினார். அதேவேளை அடுத்த வருட ஆரம்பத்தில் நல்லிணக்க நிலையத்தின் ஊடாக அனைத்துலக ரீதியிலான நல்லிணக்க மாநாடு ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இந்த மாநாட்டில் உள்நாட்டில் உள்ளவர்கள் மட்டுமன்றி உலக நாடுகளைச் சேர்ந்த நல்லிணக்கத்துறை சார்ந்த ஆய்வாளர்களும் கலந்துகொண்டு நல்லிணக்கம் தொடர்பிலான தமது அனுபவங்கள் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். இனங்களுக் கிடையிலான நல்லுறவு 'சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு' என்ற தொனிப்பொருளில் உலகளாவிய நல்லிணக்கம் பற்றிய அனுபவப் படிப்பினைகளின் மூலம் எமது நாட்டில் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு ஊக்குவிப்பதே இந்த மாநாட்டின் நோக்கம் என்றும் பேராசிரியர் மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இரண்டு மொழிகள் மூவின மக்களே வாழ்கின்றார்கள். ஆனால் இந்தியாவைப் போன்ற ஏனைய உலக நாடுகளில் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். இவ்வாறு பல மொழிகளைப் பேசுகின்ற பல மதங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் அந்த நாடுகளில் எவ்வாறு நல்லிணக்கம் நல்லுறவு பேணப்படுகின்றது என்பதையும் அதுபற்றிய அனுபவங்களின் ஊடாக இங்குள்ள மக்களுக்கும் கல்விசார் சமூகத்தினருக்கும், துறைசார்ந்தவர்கள் மற்றும் அரசியலில் ஈடுபடுகின்றவர்களுக்கும் பல்வேறு விடயங்களையும் படிப்பினைகளையும் இந்த மாநாட்டின் ஊடாகக் கிடைக்கச் செய்வதும் இந்த மாநாட்டின் நோக்கம் என்றும் இந்த நல்லுறவு நிலையம் ஒரு தொலைநோக்குடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.




நல்லிணக்கச் செயற்பாட்டுக்கான நிலையம் ஒரு புறமிருக்க வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி சிறப்பான கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்கத்துடன் வவுனியா பல்கலைக்கழகம் ஒரு சர்வதேச அலகு என்ற பிரிவை ஆரம்பித்திருக்கின்றது.

உலக நாடுகளின் சிறந்த பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து அதன் ஊடாகக் கல்விசார் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த சர்வதேச அலகின் ஊடாக இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கும் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் கல்விசார் ஊழியர்களுக்கும் இடையில் பரிமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விநெறிகள் யாவும் ஆங்கிலமொழிமூலமாகவே நடத்தப்படுகின்றன. இந்த நிலையில் இந்த வெளிநாட்டு அலகின் ஊடாக வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தமது சொந்தப் பணத்தில் இங்கு வந்து கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகின்ற மாணவர்களின் மூலம் அந்நியச் செலவாணி கிடைப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவுவதற்கும் வவுனியா பல்கலைக்கழகம் பங்களிப்புச் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பல்கலைக்கழகத்துக்கான அனுமதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக 5 வீதம் வெளிநாட்டு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகங்கள் பொதுவாக மாணவர்களுக்குக் கற்பிப்பதுடன் பட்டமளிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் வவுனியா பல்கலைக்கழகம் அதனின்று ஒரு படி முன்னோக்கிச் சென்று கடந்த ஒரு வருட காலத்தில் பல்கலைக்கழகத்துக்கும் வியாபார சமூகத்துக்கும் இடையிலான ஒரு தொடர்பை ஏற்படுத்தி இருக்கின்றது. அத்துடன் சமூகச் செயற்பாடுகளில் அறிவுசார் நிலையில் ஈடுபடவும் நிறுவன ரீதியில் சமூகத்துக்கான பணிகள் சேவைகளை முன்னேற்றுவதற்கும் வசதியாக தனியார் நிறுவனங்கள் பலவற்றுடன் வவுனியா பல்கலைக்கழகம் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் மேற்கொள்கின்ற ஆய்வுகள் மற்றும் ஆய்வு ரீதியிலான கண்டுபிடிப்புக்கள் வியாபார சமூகத்துக்குச் சென்றடைவதற்கும் அவற்றின் ஊடாக அந்த சமூகத்தினர் விழிப்படைவதற்கும் பயனடைவதற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் இதன் மூலம் வழி வகுக்கப்பட்டிருக்கின்றது.

விசேட தேவையுடையவர்களும் உயர் கல்வி வாய்ப்பைப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுவதை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கு உதவும் வகையிலும், Support Centre for Persons with Disabilities விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கான உதவி நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின் றது. சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும், உதவிகளின்றி ஒதுங்கியும் வாழ்கின்ற விசேட தேவைக்கு உட்பட்டவர்களும் பல்கலைக்கழகக் கல்வியில் இணைந்து கொள்வதை உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டதாக இந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குகின்ற பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும்



(கல்லடி நிருபர்)

அண்மையில் பயங்கரவாத சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத் திருத்தத்தில் கூட தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு விமோசனம் கிடைத்ததாகத் தெரியவில்லை. எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கையில் முற்றாக நீக்கப்பட வேண்டுமென தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த சில நாள்களுக்கு முன் விடுதலையான அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடகச் சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இந்த நிலையில் இந்தப் பயங்கரவாதச் தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட ஏராளமானோர் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று ஜனாதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு எங்கள் தமிழ் உணர்வாளர் அமைப்பு ஒரு வேண்டுகோளை விடுக்கிறோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கிராமம் கிராமமாகச் சென்று பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென்பதற்காக கையெழுத்தைச் சேகரித்தனர். ஆனால், அதற்குப் பின்பு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது.

இது விடயத்தில் அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளும் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டும். தமிழ் உணர்வாளர்கள் தமிழ் மக்களின் மீது அக்கறையுடையவர்களாகவும், அரசியல் உரிமைகளில் ஆர்வமுடையவர்களாகவும் செயற்படுகிறோம்.

மக்களுக்கு எதிர்காலத்தில் அரசியல் தொடர்பான தெளிவூட்டலை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இந்நிலையில் மக்களின் அரசியல் தெளிவின்மை காரணமாகத்தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எங்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், இன்று தமிழ்ச் சமூகத்துக்கு ஒரு பேசுபொருளாக அவர்களே செயற்பட்டு வருகின்றனர். இவர்களுடன்தான் வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட முக்கியமானோர் வருகை தரும்போது பேசுகின்றனர். தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் அவர்கள் பின்வாங்காது செயற்பட வேண்டுமென்றார்.

## பிறப்புச் சான்றிதழில் அ.அட்டை இலக்கம்

### புதிய நடைமுறை அமுல் என்கிறது ஆட்பதிவுத் திணைக்களம்

புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் உள்ளடக்கிய பிறப்பு சான்றிதழை வழங்கும் செயற்பாடுகளை ஆட்பதிவு திணைக்களம் மற்றும் பதிவாளர் திணைக்களம் என்பன இணைந்து திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

2021 டிசெம்பர் 14 ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய ஆட்பதிவு திணைக்களம் மற்றும் பதிவாளர் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து இலங்கை பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பதிவாளர் திணைக்களத்தால் வழங்கப்படும் பிறப்பு சான்றிதழ், ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்கிய பிறப்பு சான்றிதழை வழங்கும் செயற்பாடுகள் திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவை இணையவழியூடாக மேற்குறிப்பிடப்பட்ட இரு திணைக்களங்களுக்கிடையிலும் தகவல்கள் பரிமாற்றப்பட்டு வழங்கப்படவுள்ளன. ஆரம்பக்கட்டமாக இதன் முன்னோடி வேலைத்திட்டத்தை கம்பஹா, தெஹிவளை, ஹங்குராங்கெத்த, குருணாகல், இரத்தினபுரி மற்றும் தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்களில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிறப்பு சான்றிதழைப் பெற்றுக் கொண்ட சகல பிரஜைகளும் 15 வயது பூர்த்தியாவதற்கு முன்னரே தேசிய அடையாள அட்டை எண்ணைப் பெற்றுக் கொள்வதற்காக ஆட்பதிவு திணைக்களத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, குறித்த தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டு தமக்காக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த முறைமையில் தனிநபர் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் போது பிறப்பு முதல் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஒரே அடையாள இலக்கத்தை உபயோகிக்க முடியும். அத்தோடு கல்வி, சுகாதாரம், நிதி மற்றும் சமூக தகவல்களை மிக சுலபமாக சேகரித்து வைப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறும்.

இவ்வாறு தனிநபர் அடையாளம் ஒரே இலக்கத்தில் உறுதிப்படுத்தப்படுவதால் எந்தவொரு திணைக்களத்திலும் பொது மக்களுக்கு மிகவும் இலகுவாக சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருவருட நிறைவை காணும் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே வவுனியா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்கின்ற விசேட தேவைக்கு உட்பட்ட மாணவர்கள், அங்கு பணியாற்றுகின்ற விசேட தேவைக்கு உட்பட்டவர்கள் தொடர்பில் பல்கலைக்கழக சமூகத்துக்கும் வெளிச் சமூகத்துக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் ஏனையவர்களுடன் சமநிலையில் உயர்கல்வியிலும் தொழில் வாய்ப்புக்களிலும் உள்வாங்குவதை உறுதிப்படுத்துவதற்கு இந்த நிலையம் பேருதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விசேட தேவைக்கு உட்பட்டவர்கள் சமூகத்தின் பல்வேறு செயற்பாடுகளிலும் இயல்பாக உள்நுழையவும் அவர்களை இயல்பாக உள்வாங்குவதற்கும் வசதியாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக வடமாகாண அளவில் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்துவதற்கும் தொடர்ந்து, நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விசேட தேவைக்குரியவர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

வவுனியா - மன்னார் வீதியில் பம்பைமடு பிரதேசத்தில், வவுனியா நகரில் இருந்து பத்து கிலோ மீற்றர் தொலைவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வவுனியா பல்கலைக்கழக நிலச் சூழலைப் பாதுகாத்து, பசுமைச் சூழல் திட்டத்தின் கீழ் நேர்த்தியாக்கி, அழகுபடுத்தி இயற்கையுடன் வாழும் நோக்கத்துடன் அதற்கென பிரிவொன்றை அமைத்து, அதற்கென குழுவொன்றும் உருவாக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

சோபால புளியங்குளம் மற்றும் வேலங்குளம் ஆகிய இரண்டு குளங்கள் அமைந்துள்ள இயற்கைச் சூழலில் இந்தப் பிரதேசத்திற்கே உரிய 2,500 இற்கும் மேற்பட்ட தாவரங்களைக் கொண்ட 195 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இங்குள்ள இரண்டு இயற்கையான குளங்களில் ஒன்றாகிய சோபால புளியங்குளம் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாகப் பிரிவுக்கும் குடியிருப்புக்கான விடுதிகள் அமைந்துள்ள பிரிவுக்கும் இடையில் அழகான சூழலில் அமைந்துள்ளது. வேலங்குளம் குளம் பல்கலைக்கழகக் காணியின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ளது.

இந்த இரண்டு குளங்களையும் சீரமைத்து, நிலத்தடி நீரைப் பாதுகாத்து, மனதைக் கவர்ந்து மகிழ்வுறும் வகையில் இயற்கைத் தன்மை மாறாமல் அழகுபடுத்தும் நோக்கில் இந்தப் பிரதேசத்துக்கே உரிய மேலும் பல்வேறு தாவரங்களை மர நடுகைத் திட்டத்தின் கீழ் பயிரிட்டுப் பாதுகாத்துப் பேணுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களும் மாணவர்களும் பல்வேறு விடயங்களில் சர்வதேச தர நிலையிலான வரையறைகளுக்கு உட்பட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உயர்வான தரத்தில் கல்வியை வழங்குவதற்கும் வழிகாட்டி உதவும் வகையில் தர உறுதி நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் உள்ள பல்வேறு விடயங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதில் நிலவுகின்ற குறைபாடுகளைப் போக்கி ஆய்வு முயற்சிகளை மேம்படுத்தும் வகையில் சர்வதேச நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எமது புலம்பெயர் சமூகத்தின் துறைசார்ந்த வளநிலைத் திறனாளர்கள் இங்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும், இங்குள்ளவர்களும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந்தக் கட்டமைப்பு பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதேச கலாசாரங்களை மேம்படுத்தவும் பிற கலாசாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் எதிர்கால சந்ததியினருக்கு அவற்றைக் கொண்டு சேர்ப்பதற்குமாக ஒரு கலாசார நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையத்தின் ஊடாக இந்தப் பிரதேசத்தின் வரலாற்றை அடையாளப்படுத்திக் கூறுகின்ற பொருள்களையும், கலாசார அடையாளப் பொருள்களையும் சேமித்துப் பாதுகாப்பதற்காக கலாசார பொருள்காட்சி நிலையம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

புதிய கல்விப் பீடங்களை உருவாக்கும் பணியில் உடனடியாக மருத்துவ பீடம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கென பல்கலைக்கழகத்தின் எதிர்ப்புறத்தில் 35 ஏக்கர் காணியொன்றை ஒதுக்கித் தருவதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. மேலும், செயற்திட்ட முகாமைத்துவக் கல்விக்கென நிறுவகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முன்னர் இங்கு இடம்பெற்று வந்த ஆங்கிலக் கல்விக்கான டிப்ளோமா கல்வி நெறியை பல்கலைக்கழக மூதவையின் அனுமதி பெற்று ஆங்கில உயர் டிப்ளோமா கல்வி நெறியாகத் தரமுயர்த்தி மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஏனையோரும் ஆங்கிலக் கல்வியில் தமது அறிவையும் திறனையும் தரமுயர்த்தி வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வங்கியியலும் காப்புறுதியும் என்பதற்கான கற்கை நெறியில் 2021 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தாராதர உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தொழில் முயற்சியாண்மை, ஊடகவியல் போன்ற துறைகளிலான கல்வி நெறிகளை ஆரம்பிப்பதற்கும் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை உயர் டிப்ளோமா கல்வி நெறியாகம் தரமுயர்த்தித் தொடர்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வியாபார கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியன கடந்த ஒரு வருட காலப்பகுதியில் தனித்தனியே தமது துறைசார்ந்த நிலையில் சர்வதேச மாநாடுகளை நடத்தியிருக்கின்றன. தொடர்ந்து தொழில்நுட்பப் பீடம் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

பல்வேறு பிரிவினருடனும் நெருக்கமாக இணைந்து செயற்படுவது மட்டுமல்லாமல் பல்கலைக்கழகக் கல்வியில் சர்வதேச தரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக ஏனைய பல்கலைக்கழகங்களில் இருந்து வவுனியா பல்கலைக்கழகம் வேறுபட்டிருக்கின்றது.

தரமுள்ள நிலையான உயர்கல்வியை வழங்குவதுடன் சமூகத்தின் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கான தீர்வுகளை ஆய்வு ரீதியில் முன்வைப்பதை இலக்காகக் கொண்டுள்ள பல்கலைக்கழகக் கல்வியின் தூர நோக்குடன், வன்னிப் பிரதேசத்தினதும்,வடமாகாணத்தினதும் உயர் கல்வித் தரத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்தி இந்தப் பிரதேசத்தின் உயர் அடையாளமாக வவுனியா பல்கலைக்கழகத்தை உருவாக்குவதே தமது நேக்கம் என வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் இந்த ஒரு வருட நிறைவு காணும் தருணத்தில் தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அங்கம்-81

விடுதலைப் புலிகளோடு சேர்ந்து மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பணியாற்றத் தொடங்கிய பின்னர் விடுதலைப் புலிகளின் முதல் வெளியீடும் ‘சோசலிஸ தமிழீழத்தை நோக்கி..’ என்றே வெளிவந்தது. தமிழ் மக்களிடையே கூட இடதுசாரி மார்க்சிய தத்துவங்களைக் கடைப்பிடித்த ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற அமைப்புகள் இருந்தாலும் இன எழுச்சி தனித்துவம் என்ற அடிப்படைக் கோரிக்கையை வைத்தே விடுதலைப் புலிகள் முன்னெழுந்து நின்றார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நிறைவேற்றிய வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அவர்களே வாரிசானார்கள். அதனை அவர்களது மதியுரைஞர் பாலசிங்கம் தனது ‘போரும் சமாதானமும்’ என்ற நூலில் பின்வருமாறு சொல்கிறார்:–


**பாலசிங்கம் கூறியவை**

பல்பரிமாண அரச ஒடுக்குமுறையின் ஒட்டுமொத்தப் பாதிப்பு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இது தமிழ் மக்களின் உயிர் வாழ்விற்கே அச்சுறுத்தலாக அமைந்தது. இன முரண்பாட்டை மேலும் கூர்மைப்படுத்தியது. இரு தேசங்கள் மத்தியில் நல்லிணக்கமும், சமரச சகவாழ்வு ஏற்படுவதை சாத்தியமற்றதாக ஆக்கியது. தமிழ் மக்களிடையே தீவிர போக்கையும் போராட்ட உணர்வையும் வலுப்படுத்தியது. தமிழரின் ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் தோற்றம் கொள்வதற்கான புறநிலையையும் உருவாக்கியது. ஒட்டுமொத்தத்தில் அரச ஒடுக்கு முறையானது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு வழி சமைத்தது.

**தமிழ் தேசிய இயக்கமும் சமஷ்டிக் கட்சியும்**

சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் வரலாற்று பெறுபேறாகப் பிறப்பெடுத்த தமிழ் தேசியமானது ஒரு புறம் கருத்தியலாகவும், மறுபுறம் திண்ணியமான அரசியல் இயக்கமாகவும் இரு பரிமாணங்களைக் கொண்டதாக விளங்கிற்று. ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கூட்டுணர்வாகவும் அவர்களது தேசிய விழிப்புணர்வின் எழுச்சிக் கோலமாகவும் பிரவாகமெடுத்த தமிழ் தேசியமானது தன்னகத்தே முற்போக்கான புரட்சிகரமான இயல்புகளையும் கொண்டிருந்தது. ஒடுக்கப்பட்ட தமிழினமானது சுதந்திரம், தர்மம், கௌரவம் போன்ற ஆழமான அரசியல் அபிலாசைகளை வேண்டி நின்றதால் அது முற்போக்குத் தன்மை வாய்ந்தது எனலாம். தமிழ் தேசியமானது தமிழ் மக்களது சகல வகுப்பாரையும் ஒன்று திரளச் செய்து, தேச விடுதலை என்ற ஒரே இலட்சியத்தில் ஒருமுகப்படுத்தியதால் அது புரட்சிகர தலைமை வாய்ந்தது எனக் கருதலாம்.

தமிழர்களின் அரசியல் வரலாற்று படிமுறை வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வானது சமஷ்டிக் கட்சி வாயிலாகவே நிறுவன வடிவம் எடுத்தது. (சமஷ்டி கட்சியானது தமிழில் ‘இலங்கைத் தமிழரசு கட்சி’ என்று அழைக்கப்பட்டது. காலம் சென்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1949, டிசம்பரில் அதை நிறுவினர்). பொதுத் தேர்தல் 1956 இல் நடைபெற்ற போது தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் சமஷ்டி கட்சி பெரு வெற்றி பெற்றது. தமிழ்த் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வல்ல பலம் மிக்க அரசியல் சக்தியாகவும் அது முகிழ்த்தது. தமிழினத்தின் அபிலாசையைப் பிரதிபலிக்கும் தேசிய இயக்கமாக வடிவெடுத்த இக்கட்சி, முற்போக்குப் பண்புகளையும் மக்களாட்சி பண்புகளையும் தன்னகத்தைக் கொண்டிருந்தது. அத்துடன் வெவ்வேறு வர்க்கங்களையும் சாதிகளையும் ஒரு மாபெரும் மக்கள் சக்தியாக ஒன்றிணைத்து வழிநடத்தக் கூடியதாகவும் அது வடிவெடுத்தது





இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையே ஒரு பலமான அடித்தளத்தை அமைக்கத் தவறிவிட்டது. தேசிய ஒடுக்குமுறையில் குரூர நிலைமைகளை புரிந்து கொண்டு, அவற்றை தங்கள் அடிநாதமாக கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளும் அரசியல் தூரநோக்கு அவர்களிடம் இல்லாது போனதே அதன் தோல்விக்கு காரணம் எனலாம். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசிய போராட்டத்திற்கு மேலானதாக வர்க்கப் போராட்டத்திற்கு அவர்கள் முன்னுரிமை கொடுத்தார்கள். தமிழ் மக்களின் தேசப்பற்றுணர்வை தவறாக எடைபோட்டு அதை வெறும் இனவாத தேசியத்தின் பிற்போக்கு வடிவமாக முலாம் பூசினார்கள். அந்தப் போராட்டத்தின் உட்கிடையாக அமைந்த முற்போக்குப் பண்புகளையும் புரட்சிகர தன்மைகளையும் அவர்களால் இனம் காண முடியவில்லை. இரண்டு இனங்களுக்கு இடையே முக்கிய முரண்பாடாக தேசிய ஒடுக்குமுறை நிலவும் போது தொழிலாள வர்க்க ஒன்றுபடுதல் நடைமுறையில் சாத்தியமற்றது என்ற அரசியல் உண்மையை உணராது அனைத்து உலகத் தொழிலாளர் வர்க்க ஒருமைப்பாடு பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசிய போராட்டத்தின் புரட்சிகர உக்கிடைகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இதற்கு மாறாக, சமஷ்டிக் கட்சி மக்களின் பேராதரவை பெற்று வெற்றி கண்டதற்கு காரணம் தமிழினத்தின் மீது சிங்கள அரசு தொடுத்த ஒடுக்குமுறை தாக்குதலின் உக்கிரத்தை அந்த கட்சி உணர்ந்து கொண்டதே ஆகும். பன்முக ஒடுக்குமுறை வேகத்தில் தமிழ் தேசியத்தின் வடிவமும் அடையாளமும் பாதிக்கப்பட்டு விடும் என்பதை அந்தத் தலைமை புரிந்து கொண்டது. இந்த ஆபத்தின் அச்சுறுத்தலை அவர்கள் மக்களிடம் தெரிவித்தார்கள். பல்வேறு மட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினார்கள். தனித்தனி உதிரிகளாக வேறுபட்டு முரண்பட்டு நின்ற வர்க்கத்தினரையும் சாதியினரையும் அணி திரட்டி, தொடர்ச்சியான வெகுஜன போராட்டத்தில் களமிறங்கிய சமஷ்டி கட்சி ஒரு வலுவான தேசிய இயக்கமாக வடிவெடுத்தது.”

– இவ்வாறு பாலசிங்கம் கூறுகின்றார்.

அது, மார்க்ஸிய சோசலிச வரையறைக்குள் வரவில்லை. ஆயுதப் போராட்டத்தை மட்டுமே நம்பியிருந்த விடுதலைப் புலிகளை ஜே.வி.பியினரும் மற்றத் தீவிரவாத இடதுசாரிகளும் புதுயுக பாஸிசவாதிகளாகவும், மேலைத் தேசங்களின் முகவர்களாகவுமே எடை போட்டார்கள். அதனால் அவர்களுடன் ஜே.வி.பியின் ‘தேசப் பிரேமி ஜனாத வியாபாரய’ இந்திய இராணுவத்துக்கான எதிர்ப்பில் எவ்வித கூட்டுறவையும் புலிகளுடன் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

